வரு.72 இல. 50 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමන්පරි

2020 டிசம்பர் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 13 Sunday, 2020

32பக்கங்கள் 40/-

வெள்ளத்தில் தத்தளிக்குமா யாழ். நகர் 02

தமிழகத்தில் பா.ஜ.க வின் முகம் 05

புயலாக நுழைந்த இருவர் 07

ஷோபா முதல் சித்ரா வரை 18

தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண TNA முன்வந்தால் இணைந்து செயற்பட தயார்

நான் பதவி விலகினால்தான் வருவார்கள் எனில் தமிழ் மக்களுக்காக அதற்கும் தயார் – டக்ளஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்

மிக நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்று ஒரு தீர்வினை காண முன்வருமாயின் அவர்களுடன் இணைந்து செயற்பட நான் தயாராக உள்ளேன் என்று கடற்தொழில் அமைச்சரும் ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று தெரிவித்தார்.

அதேபோன்று அவர்கள் நான் அமைச்சரவையில் இருப்பதை விரும்பவில்லை எனில் நான் அமைச்சுப் பதவியிலிருந்து ஒதுங்கி அவர்கள் அரசுடன் இணைந்து தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கூடவே ஆதரவாக இருப்பேன். அதற்கான அழைப்பையே நான் பாராளுமன்றத்திலும் விடுத்திருந்தேன் என்றும் தெரிவித்தார்.

என்னைப் பொறுத்த [illegible] ரிடமும் கையேந்தியதுவுமில்லை. எனக்கு தேவை தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை என தெரிவித்த அவர், தென்னிலங்கையை உசுப்பேற்றும் செயற்பாடுகளிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலகிக்கொள்ள வேண்டும் எனவும் கேட் [illegible] ஆதரவை பெறுவதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாக இருந்து வருகின்றது. அதனை அவர்கள் இனி கைவிட வேண்டும் எனவும் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார்.

தமிழ் மக்கள் எனக்கும், எனது கட்சிக்கும் தேவையான ஆதரவினை வழங்கி இருந்தால் அல்லது எதிர் காலத்தில் வழங்குவார்கள் எனில் என்னால் அரசாங்கத்துடன் முழுமையாக பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிமையுடனும், அதிகாரத்துடனும் தீர்வினைக் காண முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் இந்த உண்மை நிலையை உணரும் காலம் வரும்வரை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தலைமைகளுக்கு அவர்களது சுயலாப அரசியல் நடத்துவதற்கு வாய்ப்பாகவே இருந்துவரும். எனவே தமிழ் மக்கள் இந்த உண்மை நிலையை உணர்ந்து ஒரு மாற்றத்தை கொண்டுவர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும், வெளியேயும் அரசாங்கத்திற்கு எதிரான 04

கொழும்பில் சில பகுதி ஊரடங்கு சட்டம் தளர்

கொரோனா ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் - ச

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டிருந்த பல பிரதேசங்கள் நேற்றுக்காலை திறக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க கொழும்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த ஆறு மாடிவீட்டுத் தொகுதிகள் சிலநேற்றுக் காலை 6 மணி முதல் திறக்கப்பட்டு ள்ளதாகவும் கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதற்கிணங்க மட்டக்குளி ரண்திய உயன, முகத்துவாரம் பிரதேசத்தில் மென்சந்த செவன, மிஹிஜய செவன, [illegible] முவதொர உயன, சமகிபுர, தெமட்ட கொடை பிரதேசத்தில் மிகிந்து செத்புர ஆகிய பிரதேசங்களிலுள்ள மாடி வீட்டுத் தொகுதிகளே தனிமைப்படுத்தல் முடக்கத்தில் இருந்து நேற்று திறக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் ஏழு மாடி வீட்டுத் தொகுதிகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் ஓரிரு தினங்களில் அவற்றையும் திறக்க முடியும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த 7ஆம் திகதி மென்சந்த செவன மாடி வீட்டுத் தொகுதியில் 986 பேருக்கு 04

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கடந்த வியாழக்கிழமை வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவினர்கள் வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினார்கள். தனது மகனை தேடிவரும் தாய் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை காணலாம். (படம்: பருத்தித்துறை விசேட நிருபர்)

திருமலை கன்னியா வெந்நீரூற்று பகுதியில்

பிள்ளையார் ஆலயம் கட்ட அரசாங்க தரப்பு இணக்கம்

ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினையை தீர்த்து வைப்பது இ.தொ.காவின் பொறுப்பு;

மலையக தொழிற்சங்க அரசியலை நன்கு கரைத்து குடித்தவன் நான்

எனக்கு எவரும் பாடம் புகட்ட வேண்டாம் என்கிறார் ஜீவன் தொண்டமான்

எஸ். சுரேஷ்

ஆயிரம் ரூபா சம்பள பிரச்சினையை தீர்த்து வைப்பது எமது பொறுப்பு. அதற்குரிய காலம் விரைவில் வரும் மலையக அரசியல் தொடர்பாக எனக்கு சிலர் பாடம் கற்பிக்க முயல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் மலையக தொழிற்சங்க அரசியலை எனது தந்தையார் காலத்தில் இருந்து கரைத்துக் குடித்தவன் நான். மலையக மக்களின் அடிப்படைத் தேவைகள் முதல் அவர்களது சகலவிதமான 04

தமிழர் தரப்பு பிரச்சினைகளுக்கு

முஸ்லிம்களும் குரல் கொடுக்க வேண்டும்

மனோ

முஸ்லிம் அரசியல் தலைமைகளும், தமிழர்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் 04

நாடு முழுவதும் பரவும் நிலையில் கொரோனா;

சமூகத்திற்குள் பேராபத்து வரும்

ஹெல உறுமயவிலிருந்து விலகினார் சம்பிக்க

மேலும் பல உறுப்பினர்களும் இராஜினாமா

லோரன்ஸ் செல்வநாயகம்